# நேஷன்ஸ் செலரி சேர்வர்

## நியதிகளும் நிபந்தனைகளும்

1. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி (வங்கி),

    i. நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் நன்மைகளை, சலுகைகளை வசதிகளை வழங்குவதற்கு தேவையான அனைத்துப் பிரமாணங்களையும் நான் நிறைவுசெய்தாலும் கூட, ஏதேனும் காரணத்தை குறித்தொதுக்காது எவையேனும் அத்தகைய நன்மைகளை, சலுகைகளை அத்துடன் வசதிகளை முழுமையாக அல்லது பகுதியாக எனக்கு வழங்குவதை நிராகரிப்பதற்கு,

    ii. நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட எவையேனும் நன்மைகளை, சலுகைகளை அத்துடன்/அல்லது வசதிகளை, எந்நேரத்திலும் அதற்கான ஏதேனும் காரணத்தை குறித்தொதுக்காது நிறுத்துவதற்கு, மீளப்பெறுவதற்கு அத்துடன்/அல்லது இரத்துச்செய்வதற்கு,

    iii. நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் நன்மைகளை, சலுகைகளை அத்துடன்/அல்லது வசதிகளை அல்லது அத்தகைய நன்மைகளை, சலுகைகளை அத்துடன்/அல்லது வசதிகளை வழங்குவதற்கு நிறைவுசெய்யப்பட வேண்டிய பிரமாணத்தை எந்நேரத்திலும் வேறுபடுத்தவதற்கு, திருத்தியமைப்பதற்கு, திருத்துவதற்கு அத்துடன்/அல்லது மாற்றுவதற்கு,

    iv. எந்நேரத்திலும் எனக்கான அறிவிப்புடன் நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கினை நிறுத்துவதற்கு, மீளப்பெறுவதற்கு அத்துடன்/அல்லது இரத்துச்செய்வதற்கு,

ஏக மற்றும் முழுமையான உரிமையினையும் தற்றுணிபினையும் கொண்டிருக்கும்.

    v. எனது மாதாந்த சம்பளத்தை கிரமமான அடிப்படையில் நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கிற்கு அனுப்புவதற்கு நான் தவறுமிடத்து, வங்கி அதன் ஏக தற்றுணிபில் எனது நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கினை நேஷன்ஸ் சேர்வர் கணக்காக மாற்றும் என்பதுடன் நான் அதனை உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றேன்.

    vi. மேலே குறிப்பிட்டவாறு நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கு நேஷன்ஸ் சேர்வர் கணக்காக மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கின் கீழ் வழங்கப்படும் நன்மைகள் மற்றும் வசதிகள் மீளப்பெறப்படலாம் என்பதுடன் நான் அதற்கு இணங்குகின்றேன். எவ்வாறாயினும், அத்தகைய நன்மைகளைப் பயன்படுத்தியதன் காரணமாக தோன்றக்கூடிய அனைத்து பொறுப்புகளும் எனக்கு தொடர்ந்தும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இணங்குகின்றேன்.

2. எனது தேறிய சம்பளத்தினை நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு இத்தால் பொறுப்பேற்கின்றேன்.

3. நேஷன்ஸ் செலரி சேர்வர் என்பது வங்கிக் கூற்றுடனான சேமிப்புக் கணக்கொன்றாகும் என்பதனை நான் அறிவேன்.

4. வங்கியின் இவ்விண்ணப்பப் படிவம், சந்தைப்படுத்தல் சிற்றேடுகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் வேறு படிவங்கள் அத்துடன் ஆவணங்கள் ஊடாக அறிவிக்கப்பட்ட நேஷன்ஸ் செலரி சேர்வர் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அத்துடன் அம்சங்கள் மூலம் பிணைக்கப்பட்டிருப்பதனை நான் அறிவேன், ஏற்றுக்கொள்கின்றேன் அத்துடன் இணங்குகின்றேன் என்பதுடன் முன்கூட்டியே எனக்கு அறிவிப்படாது

அவை மாற்றத்திற்கு உட்படுபவை என்பதனை அறிவேன், ஏற்றுக்கொள்கின்றேன் அத்துடன் உடன்படுகின்றேன்.

5. நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் வழங்கப்படும் நன்மைகளுக்கான, சலுகைகளுக்கான அத்துடன்/அல்லது வசதிகளுக்கான எனது கோரிக்கைகள் வங்கியின் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் உட்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நான் உடன்படுகின்றேன் அத்துடன் ஏற்றுக்கொள்கின்றேன் மற்றும் வங்கியின் ஏக தற்றுணிபில் அத்தகைய கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான உரிமையினை வங்கி கொண்டிருத்தலும் வேண்டும்.

6. நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கொன்றினை ஆரம்பிக்கும் போது நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு நான் தகைமை உடையவராக இருக்கலாம் என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். எவ்வாறாயினும், அத்தகைய நடைமுறைக் கணக்கானது அத்தகைய நேரத்தில் நிலவுகின்ற வங்கியின் நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

7. நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் வழங்கப்படும் அனைத்து வசதிகளும்/பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளும், நேஷன்ஸ் செலரி சேர்வரின் கீழ் குறிப்பாக தள்ளுபடி செய்யப்பட்டாலன்றி அத்தகைய வங்கி வசதிகளுக்கு/பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளுக்கு ஏற்புடைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

8. நேஷன்ஸ் செலரி சேர்வர் நியதிகளுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு அத்துடன் அம்சங்களுக்கான ஏதேனும் மாற்றம் (மாற்றங்கள்) பற்றிய அறிவித்தலானது வங்கிக் கூற்றில் விவரிப்பாக அல்லது வங்கிக் கூற்றுடன் உள்ளடக்கப்பட்டதாக அல்லது இலங்கையில் வெளியிடப்படுகின்ற ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செய்திப்பத்திரிகைகளில் மாற்றம் பற்றிய அத்தகைய அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் அல்லது வங்கிக் கிளைகளில் அறிவித்தல் பலகை வாயிலாக எனக்கு அறிவிக்கப்படலாம் என்பதை நான் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்றேன் அத்துடன் உடன்படுகின்றேன். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் இதன் கீழான ஏதேனும் அறிவித்தல், இறுதியாக பதிவாகிய முகவரிக்கு அஞ்சல்செய்து ஏழு நாட்களினுள் எனக்கு கிடைக்கப்பெற்றதாக கருதப்படும்.

9.
   i. நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கு இலக்கமொன்று எனக்கு வழங்கப்படும் என்றும், அதனை வங்கியுடனான அனைத்து தொடர்பாடல்களிலும், அனைத்து வைப்புச் சீட்டுக்கள் மற்றும் மீளெடுப்புப் படிவங்கள் மீதும் குறிப்பிட வேண்டும், அவ்வாறு வழங்கப்பட்ட இலக்கத்தினை எனக்கான அறிவித்தலுடன் மாற்றுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

   ii. வங்கிக் கூற்றுச் சுழற்சியின் இறுதியிலிருந்து 10 நாட்களினுள் வங்கிக் கூற்று கிடைக்கவில்லையாயின், வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும் என அறிவேன் என்றும் இப்பதிவுகளின் சரியானதன்மையினை உறுதிசெய்வதற்கு வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒவ்வொரு கணக்குக் கூற்றினையும் பரீட்சிப்பதற்கு நான் உடன்படுகின்றேன் என்றும் ஏதேனும் பிழைகள், வங்கிக் கூற்று கிடைக்கப்பெற்ற 14 நாட்களினுள் வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

   iii. எனது வங்கிக் கூற்றுகளின் பிரதிகளை பாதுகாக்கும் பொறுப்பு எனக்கு உள்ளது என்றும் வங்கியிடமிருந்து வங்கிக் கூற்றுகளின் பிரதிகள் கோரப்பட வேண்டுமாயின், அதன் வெளியிடப்பட்ட கட்டணத்திற்கு அமைவாக இச் சேவையினை வழங்குவதற்காக கட்டணங்களை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

   iv. கணக்கொன்றின் வரவுக்காக வங்கி மீது வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள், கொடுப்பனவு செய்யப்படுகின்ற போது, வங்கியானது அதன் வெளியிடப்பட்ட கட்டணத்திற்கு அமைவாக கையாளுகைக் கட்டணங்களை அறவிடலாம். அத்தகைய வைப்புகள் மீதான பெறுமதியளிக்கும் திகதியானது வங்கியின் நடைமுறையிலுள்ள கொள்கையினைச் சார்ந்து வங்கியினால் தீர்மானிக்கப்படும். வங்கி மீது வரையப்படாத வரைவுகள்/காசோலைகள், சேமிப்புக் கணக்கின் வரவிற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற போது, கணக்கிற்கு வரவுவைக்கின்ற போது

கையாளுகை கட்டணங்களுக்கு மேலதிகமாக, சாதனத்தின் முகப்பெறுமதியிலிருந்து கழிவுக் கட்டணங்களை கழிக்கலாம்.

v. வைப்புகள் விரும்பப்பட்டவாறு அடிக்கடி மேற்கொள்ளப்படலாம். அனைத்து வைப்புகளும் வைப்புச் சீட்டு மீது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் கையொப்பத்தின் கீழ் கைகளால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவொன்றின் மூலம் வைப்புச் சீட்டு செல்லுபடியாக்குதல் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படும். அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்களினதும் மாதிரி காசாளர் முனைய அச்சினதும் அட்டவணையை கோரிக்கையின் மீது பார்க்கக்கூடியதாக இருக்கும்.

vi. "முகாமையாளர் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி" ஐத் தொடர்ந்து பயன்பெறுனரின் பெயர் மற்றும் கணக்கிலக்கம் சார்பில் வரையப்பட்ட காசோலை வைப்புகள், கிளை முகாமையாளரின் அனுமதிக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்படலாம். காசோலை வைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் பெறுகைகள் (ஏதேனும் இருப்பின்) வாடிக்கையாளரின் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டாலன்றி, கிளைகளில் அமையப்பெற்றுள்ள காசோலை வைப்பிலிடல் பெட்டியில் வைப்பிலிடப்பட்டதாக கூறப்படுகின்ற (தற்காலிக குறிப்பொன்றினை சமர்ப்பித்தல் எவ்வாறிருப்பினும்) ஏதேனும் காசோலைக்காக வாடிக்கையாளருக்கு வங்கி பொறுப்புடையதாகாது. வைப்பு பெட்டியினால் வழங்கப்பட்ட தற்காலிக குறிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு வைப்பிலிடப்பட்டதாகக் கூறப்படுகின்ற காசோலைகள் வாடிக்கையாளரின் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டாலன்றி, எச்சூழ்நிலையின் கீழும் அல்லது எதுவாயினும் எக்காரணத்திற்காகவும் வங்கியானது காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்பிலிடப்படுகின்ற காசோலைகள் தொடர்பில் ஏதேனும் உரிமைக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது. வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுகின்ற காசோலைகள், சேகரிப்புக்காக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், வரையும் வங்கியினால் தீர்ப்பனவு செய்யப்படும் வரை பெறுகைகள் மீளெடுப்புக்காக கிடைக்கப்பெறமாட்டாது. நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்ற திகதியானது குறித்துக்காட்டும் நோக்கத்திற்காக மாத்திரம் காண்பிக்கப்படுகின்றது என்றும்.

<u>மீளெடுப்புகள்</u>

vii. ஏற்புடைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டு, தானியக்கப் பண மீளெடுப்பு இயந்திரங்கள் (ATM) ஊடாக அல்லது கிளைகளில் விரும்பியவாறு பல தடவைகள் மீளெடுப்புகள் மேற்கொள்ளப்படலாம். ATM அட்டைக் கட்டணங்களும் வேறு வங்கிகளின் ATM களில் இருந்து மீளெடுப்புக்கான கட்டணங்களும் வங்கியின் தற்போதைய வீதங்களில் கொடுப்பனவு செய்யத்தக்கதாக இருத்தல் வேண்டும். கிளைகளில் பண மீளெடுப்புகள், சாதகமான அடையாளப்படுத்தலின் மீது, 25 ஆம் நிபந்தனையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும். ஏற்புடையதானவிடத்து முத்திரைத் தீர்வை மற்றும் வேறு வரிகள் அத்துடன் அறவீடுகள் கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்படத் தக்கவையாகவிருக்கும் என்பதுடன் சட்டத்திற்கு அமைவாக வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். காசோலைகளின் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தின் வாயிலாக சேமிப்புக் கணக்குகளிலிருந்து பண மீளெடுப்புகள் மேற்கொள்ளப்படலாகாது.

viii. நேஷன்ஸ் செலரி சேர்வர் கணக்கின் பற்றுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு என்னிடமிருந்து நியாயமான காலத்தினுள் அஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற அல்லது வங்கியின் ஏதேனும் கிளைக்கு ஒப்படைக்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல்களின் (நிலையியல் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கலாக) மீது மாத்திரம், எனினும் மேலே (iv) ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு செயற்படும். எவ்வாறாயினும், வங்கியானது குறித்துரைக்கப்பட்ட கால வரையறையினுள் அத்தகைய அறிவுறுத்தல்கள் மீது செயற்படுவதற்கு அது தவறுவதிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் கோரிக்கைகளுக்கு, இழப்புகளுக்கு அல்லது செலவுகளுக்கு வங்கி பொறுப்புடையதாகாது அல்லது பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாது. வங்கிக்கும் எனக்கும் இடையிலான குறிப்பான

உடன்படிக்கையின்றி தொலைநகல், மின்னஞ்சல் அல்லது ஏதேனும் வேறு இலத்திரனியல் ஊடகம் வாயிலாக கிடைக்கப்பெறுகின்ற ஏதேனும் அறிவுறுத்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

<u>வட்டி</u>

ix. நாளாந்தம் கிடைக்கப்பெறுகின்ற மீதியின் மீது நடப்பு வீதத்தில் கணிக்கப்படுகின்ற வட்டியானது மாதாந்தம் கணக்கிற்கு வரவுவைக்கப்படும் (வழமையாக மாதத்தின் இறுதி நாளன்று). வட்டிக் கொடுப்பனவுகள் (vii), (x) மற்றும் (xii) ஆம் வாசகங்களில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகவிருக்கும்.

x. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வேண்டப்பட்டவாறு கணக்கை ஆரம்பிக்கும் படிவங்களின் மீது எனது வரி நிலைமைகள் பற்றிய அத்துடன், வதிவிட நிலைமைகள் பற்றிய நியதிச்சட்ட பிரகடனம் என்னால் பூர்த்திசெய்யப்பட வேண்டும். என்னால் ஆக்கப்பட்ட நியதிச்சட்ட பிரகடனமானது அதே பொறுப்பாணை மூலம் திறக்கப்பட்டு ஆளப்படுகின்ற ஏற்கனவேயுள்ள அத்துடன் புதிய கணக்குகள் அனைத்துக்கும் ஏற்புடையதாகவிருக்கும். வட்டிக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி அல்லது ஏதேனும் வேறு செலுத்தத்தக்க வரி, காலத்திற்குக் காலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அத்தகைய வேறு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்காக அத்தகைய (வீதத்தில் அல்லது வீதங்களில்) கொடுப்பனவு செய்யத்தக்க வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் வங்கியிடமிருந்து பின்னதாக கோரப்பட்டிருக்குமெனில், கொடுப்பனவு செய்யப்படாத பிடித்துவைத்தல் வரிகளை என்னிடமிருந்து அறவிடுவதற்கு (ஏதேனும் அறிவித்தலின்றி) வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

<u>பொது</u>

xi. ஏதேனும் முகவரி மாற்றம் பற்றி நான் வங்கிக்கு எழுத்தில் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

xii. வங்கி, அதன் ஏக தற்றுணிபில் கிளைக் கருமபீட கொடுக்கல்வாங்கல்கள் அத்துடன்/அல்லது ATM கொடுக்கல்வாங்கல்கள் மீது வேறான கொடுக்கல்வாங்கள் கட்டணங்களை அறிமுகப்படுத்தலாம். கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதக் காலப் பகுதியினுள் வாடிக்கையாளரினால் மூடப்படுகின்ற கணக்குகள் மீது கையாளுகைக் கட்டணமொன்று அறவிடப்படும். நடைமுறையில் ஏற்புடைய கட்டணங்களும் அறவீடுகளும் வங்கியின் கட்டணக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன, கோரப்படும் பட்சத்தில் அது கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது.

xiii. அறவீடு செய்யப்பட்ட சேவைக் கட்டணம் நடப்பு மாதத்தினுள் அல்லது அடுத்த மாதம் எனது கணக்கிலிருந்து பற்றுவைக்கப்படக் கூடியது.

xiv. வங்கிக் கூற்றுகளின் அத்துடன்/அல்லது கொடுக்கல்வாங்கல் பதிவுகளின் பிரதிகளை வங்கி ஏழு வருடங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு மாத்திரம் வைத்திருக்கும். அனைத்து அத்தகைய பதிவுகளும் ஏழு வருடங்களின் பின்னர் அழிக்கப்படும் என்பதுடன் ஏழு வருடங்களின் பின்னர் வங்கிக் கூற்றுகளின் அல்லது கொடுக்கல்வாங்கல் பதிவுகளின் பிரதிகளை வழங்குவதற்கு வங்கி பொறுப்பெதனையும் ஏற்காது அல்லது பொறுப்புடையதாகாது.

xv. வங்கியின் ஏக தற்றுணிபில் அவ்வாறு செய்யப்பட்டாலன்றி, பண வைப்புகளுக்கு மற்றும் மீளெடுப்புகளுக்கு, காசோலை வைப்புகளுக்கு மற்றும் வேறு பற்றுகள்/வரவு கொடுக்கல்வாங்கல்களுக்கு அஞ்சல் மூலம் தனியான வாடிக்கையாளர் அறிவுறுத்தல்களை வங்கி அனுப்பாது.

xvi. வங்கியானது அறிவித்தலின்றி, உங்களது கணக்கினை/ கணக்குகளை வங்கிக்கான ஏதேனும் பொறுப்புகளுடன் ஒருங்கிணைக்கலாம் அல்லது ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் அத்தகைய

பொறுப்புகள், உண்மையாக அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானவையாக அல்லது பிணையஉறுதியாக அத்துடன் பல அல்லது இணைந்ததாக எதுவாகவிருப்பினும்சரி, ஏதேனும் அத்தகைய கணக்குகளின் வரவில் இருக்கின்ற ஏதேனும் தொகையினை/தொகைகளை அல்லது வங்கியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் கணக்கிலிருந்து அல்லது ஏதேனும் வேறு தொடர்பில் உங்களுக்கு உரித்தான ஏதேனும் வேறு தொகையினை/தொகைகளை எதிரீடு செய்யலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

xvii. கணக்கை ஆரம்பிப்பதை நிராகரிப்பதற்கு அத்துடன்/அல்லது கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாக பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு ஏழு (7) நாட்கள் கொண்ட எழுத்திலான அறிவித்தலின் பின்னர் ஏதேனும் காரணத்தை வழங்காது ஏதேனும் கணக்கை மூடுவதற்கு வங்கி, சுயமாக உரிமையினைக் கொண்டிருக்கும். பூச்சிய நிலுவையுடன் கூடிய கணக்கு வைத்திருப்பவரின் கணக்கினை முடக்குவதற்கான உரிமையினையும் வங்கி கொண்டிருக்கும். அத்தகைய பூச்சிய மீதியுடன் தொடர்ந்து செல்கின்ற அத்துடன் மூன்று (3) மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு செயற்படாமல் இருக்கின்ற அத்தகைய அனைத்து கணக்குகளையும் கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாக பதிவாகிய முகவரிக்கு அத்தகைய மூடுதல் பற்றிய ஏழு (7) நாட்களைக் கொண்ட எழுத்திலான அறிவித்தலின் பின்னர் மூடுவதற்கான உரிமையினையும் வங்கி கொண்டிருக்கும்.

xviii. சட்டத்தினால், அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்தப்பட்டிருப்பின் விதிகளும் நிபந்தனைகளும் தன்னிச்சையாக திருத்தப்படுவதாக இருக்கும்.

xix. இவ்நேஷன்ஸ் சேர்வர் கணக்கினை திறப்பதன் அல்லது தொடர்வதன் மூலம், சேமிப்பொன்றினை கொண்டுநடாத்துவதனை ஆளுகின்ற வங்கியின் நியதிகளை மற்றும் நிபந்தனைகளை நான் வாசித்து அறிந்துகொண்டேன் என்றும் அவற்றின் மூலம் பிணைக்கப்படுகின்றேன் என்றும் கருதப்படுதல் வேண்டும். மேலே viii ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு, எந்நேரத்திலும் இந்நியதிகளை அல்லது நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்கு, திருத்தியமைப்பதற்கு அல்லது ஏதேனும் சேர்ப்பதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

xx. எனது கணக்கு தொடர்பிலான கணக்குத் தகவல்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரவுகளும், ஊடுகடத்தப்படலாம் அத்துடன்/அல்லது ஏதேனும் அமைவிடத்தில் சேமிக்கப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் அத்துடன் நிருவாகம் மற்றும் உள்ளகக் கண்காணித்தல் தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக ஏதேனும் நோக்கத்திற்காக அத்தகைய ஊடுகடத்தல், சேமித்தல் அத்துடன்/ அல்லது அணுகுதல் அவசியமானது என அவர்கள் அபிப்ராயப்படுகின்றவிடத்து, கணக்கு பற்றிய வங்கிக் கூற்றுகளை அச்சிட்டு அஞ்சல் செய்வதற்காக அல்லது ஏதேனும் அதனையொத்த சேவைகளை வழங்குவதற்காக வங்கியின், அதன் தலைமை அலுவலகத்தின், கிளை அலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினால் அல்லது வழங்கப்படும் ஏதேனும் தரவு செயன்முறைப்படுத்தல் சேவையில் அல்லது வங்கியினால் ஈடுபடுத்தப்படுகின்ற எவரேனும் ஆளினால் அணுகப்படலாம் என்பதுடன் உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றேன்.

xxi. வங்கியானது பணம் துய்தாக்குதலை, பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தலை தடுத்தல் அத்துடன் எவையேனும் தடைகளுக்குட்படக் கூடிய எவரேனும் ஆட்களுக்கு, நிறுவனங்களுக்கு நிதியியல் மற்றும் வேறு சேவைகளை வழங்குதலுடன் தொடர்புடைய வங்கிக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கு வேண்டப்பட்டுள்ளது. ஆகையினால் வங்கியானது அதன் ஏக அத்துடன் முழுமையான தற்றுணிபில் அத்தகைய சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயற்படுவது இயைபானது எனக் கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைக்கு உரித்துடையதாகவிருக்கும்.

xxii. வங்கியானது

(அ) நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஏதேனும் அதன் கடமைகளை செயலாற்றுவதில் வங்கி மூலமான ஏதேனும் தாமத்திலிருந்து அல்லது செய்யாதுவிடலில் இருந்து அல்லது அத்தகைய விதிகள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயலாற்றுவது இயைபானது என்று வங்கி கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைகளினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பட்ட வேறு கடப்பாடுகளிருந்து,

**அல்லது**

(ஆ) இவ்வாசகத்தின் கீழ் வங்கியின் ஏதேனும் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதில் இருந்து,

தோன்றுகின்ற நட்டங்களுக்கு (நேரடியான அல்லது முக்கிய விடயங்களைக் கொண்டதாக அத்துடன் இலாபம் அல்லது வட்டி இழப்பு உள்ளடங்கலாக ஆனால் எதுவாக இருப்பினும் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது) அல்லது சேதங்களுக்கு பொறுப்புடையதாகாது.

ஏதேனும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மேலோங்கிய தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு, வங்கியானது அத்தகைய சூழ்நிலை காணப்படுவது பற்றி நடைமுறைச் சாத்தியமானளவு விரைவாக எனக்கு அறிவிப்பதற்கு முயற்சியினை மேற்கொள்ளும்.

xxiii. ஏதேனும் கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற பிழையான பதிவுகள், அடுத்துவருகின்ற காலமுறையான நிலுவைக் கூற்றினை வழங்குவதற்கு முன்னரோ அல்லது வழங்குவதற்குப் பின்னரோ பற்றுவைத்தல் பதிவின் ஊடாக (மீளத்திரும்பல் பதிவு) மீளத்திருப்பப்படலாம், சரிசெய்யப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம். வட்டிக் கணிப்பீடு (ஏனைய ஆதாயம்) தொடர்பில் வங்கி, பிழையான பதிவு மேற்கொள்ளப்பட்ட தினத்தன்றுள்ளவாறு பதிவுகளை பின்னோக்கிச் செயற்படுத்தும்.

xxiv. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து கணக்கு வைத்திருப்போருக்கும் வழங்கப்படுகின்ற வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மூலம் நான் பிணைக்கப்பட்டிருப்பேன். அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவான வியாபார நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதனை பொருட்படுத்தாது, இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மூலமும் முழுமையாகவும் சமமாகவும் நான் பிணைக்கப்பட்டிருப்பேன்.

என்றும், புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்றேன்.